DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SIVAKASI

CC.NO.63/2026

**Depositions of PW.1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **தங்கவேல்** | **Caste** | |
| **Father's Name** | **முனியாண்டி** | **Calling** | |
| **Village** | **லட்சுமியாபுரம்** | **Religion** | |
| **Taluk** | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th Day of June 2026.

Signature of Witness.

**<u>05.06.2026</u>**

( எதிரி ஆஜர் )

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கங்காகுளத்தில் குடியிருந்து, ஓட்டுநராக வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது மகன் ஆவார். எதிரி அடிக்கடி மதுஅருந்திவிட்டு வந்து என்னிடமும், என் மனைவியிடமும் பிரச்சனை செய்து வந்தான். 2024 ஆம் ஆண்டு தேதி, மாதம் ஞாபகம் இல்லை. ஒரு நாள் இரவு 11.00 மணியளவில் எதிரி மதுஅருந்திவிட்டு வந்து வீட்டு

வாசலில் உட்கார்ந்திருந்தான். நான் எதற்காக குடித்துவிட்டு வந்தாய் என்று கேட்ட போது எதிரிக்கும், எனக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு கூட்டம் கூடிவிட்டது. கூட்டத்தில் அடையாளம் தெரியாத நபர் என்னை கீழே தள்ளிவிட்டதில் எனக்கு தலையிலும், கையிலும் காயம் ஏற்பட்டது. காயம்பட்ட நான் சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த போது விசாரிக்க வந்த போலீசாரிடம் சம்பவ இடத்தில் எதிரியும் இருந்ததால் சந்தேகத்தின் பேரில் எதிரி மீது புகார் சொன்னேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார்வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. புகார் வாக்குமூலத்தில் உள்ள சாட்சியின் கையொப்பம் மட்டும் **அ.சா.ஆ–1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீஸ் என்னை விசாரணை செய்தார்கள்.

(சாட்சி அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளிப்பதால் அவரை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது. )

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரி எனது மகன் என்பதால் அவருடன் நான் சமாதானம் ஆகிவிட்டேன் என்றால் சரிதான். 15.06.2024 ஆம் தேதி இரவு 11.00 மணியளவில் நான் வேலையை முடித்து வீட்டிற்கு வந்த போது எதிரி என்னை பார்த்து அசிங்கமாக பேசி, இந்த வயசுல உனக்கு எல்லாம் எதற்கு பேண்ட் என்று கூறிக்கொண்டே அருகில் கிடந்த கட்டையை எடுத்து என் தலையிலும், கை, கால்களிலும் அடித்தார் என்றால்

சரியல்ல. எனது சத்தம் கேட்டு அருகிலிருந்த செல்வராஜ், மாரிஸ்வரன் மற்றும் எனது மனைவியும் சேர்ந்து எதிரியை சத்தம் போட்டார்கள் என்றால் சரியல்ல. அப்போது எதிரி என்னை பார்த்து கொலைமிரட்டல் விடுத்து சென்றார் என்றால் சரியல்ல. காயம்பட்ட நான் சிவகாசி அரசு மருத்துவமனையிலிருந்த போது என்னை விசாரிக்க வந்த போலீசாரிடம் எதிரி மீது புகார்வாக்குமூலம் அளித்துவிட்டு தற்போது எதிரி என் மகன் என்பதால் அவரை காப்பாற்றும் நோக்கில் நடந்த உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SIVAKASI

CC.NO.63/2026

**Depositions of PW.2**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **பாண்டியம்மாள்** | **Caste** | |
| **Father's Name** | **தங்கவேலு** | **Calling** | |
| **Village** | **கங்காகுளம்** | **Religion** | |
| **Taluk** | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th Day of June 2026.

Signature of Witness.

<u>05.06.2026</u>

( எதிரி ஆஜர் )

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கங்காகுளத்தில் குடியிருந்து, பட்டாசு தொழிற்சாலையில் வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது மகன் ஆவார். எதிரி அடிக்கடி மதுஅருந்திவிட்டு வந்து என்னிடமும், என் கணவரிடமும் பிரச்சனை செய்து வந்தான். 2024 ஆம் ஆண்டு தேதி, மாதம் ஞாபகம் இல்லை. ஒரு நாள் இரவு 11.00 மணியளவில் எதிரி

மதுஅருந்திவிட்டு வந்து வீட்டு வாசலில் உட்கார்ந்திருந்தான். எனது கணவர் எதற்காக குடித்துவிட்டு வந்தாய் என்று கேட்ட போது எதிரிக்கும், எனது கணவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு கூட்டம் கூடிவிட்டது. கூட்டத்தில் அடையாளம் தெரியாத நபர் எனது கணவரை கீழே தள்ளிவிட்டதில் எனது கணவருக்கு தலையிலும், கையிலும் காயம் ஏற்பட்டது. காயம்பட்ட எனது கணவரை சிவகாசி அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த போது விசாரிக்க வந்த போலீசாரிடம் சம்பவ இடத்தில் எதிரியும் இருந்ததால் சந்தேகத்தின் பேரில் எதிரி மீது எனது கணவர் புகார் சொன்னார். இது சம்பந்தமாக போலீஸ் என்னை விசாரணை செய்தார்கள்.

(சாட்சி அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளிப்பதால் அவரை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது. )

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

கடந்த 15.06.2024 ஆம் தேதி இரவு 11.00 மணியளவில் என் கணவர் வேலையை முடித்து வீட்டிற்கு வந்த போது எதிரி என் கணவரை பார்த்து அசிங்கமாக பேசி, இந்த வயசுல உனக்கு எல்லாம் எதற்கு பேண்ட் என்று கூறிக்கொண்டே அருகில் கிடந்த கட்டையை எடுத்து எனது கணவர் தலையிலும், கை, கால்களிலும் அடித்தார் என்றால் சரியல்ல. எனது கணவர் சத்தம் கேட்டு அருகிலிருந்த செல்வராஜ், மாரிஸ்வரன் மற்றும் நானும் சேர்ந்து எதிரியை சத்தம் போட்டோம் என்றால் சரியல்ல. அப்போது எதிரி எனது கணவரை பார்த்து

கொலைமிரட்டல் விடுத்து சென்றார் என்றால் சரியல்ல. எதிரி என் மகன் என்பதால் அவரை காப்பாற்றும் நோக்கில் நடந்த உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.2, SIVAKASI

CC.NO.63/2026

**Depositions of PW.3**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **மாயகிருஷ்ணன்** | **Caste** | |
| **Father's Name** | **அழகர்சாமி** | **Calling** | **தலைமை காவலர்** |
| **Village** | | **Religion** | |
| **Taluk** | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the05th Day of June 2026.

Signature of Witness.

<u>05.06.2026</u>

எதிரி ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது திருத்தங்கல் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் விசாரணை அதிகாரியான உதவி ஆய்வாளர் பாண்டியராஜன் பணிமாறுதலில் அயல் காவல் நிலையத்தில் பணியாற்றி வருவதால் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு, எதிரி தரப்பு ஆட்சேபணையின்றி நீதிமன்ற அனுமதியுடன் வழக்கின் ஆவணங்களைப் பார்வையிட்டு நான் சாட்சியம்

அளிக்கிறேன். கடந்த 16.06.2024 ஆம் தேதியன்று 00.15 மணிக்கு உதவி ஆய்வாளர் பாண்டியராஜன் நிலைய பொறுப்பில் இருந்தபோது, சிவகாசி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலைப்பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த கங்காகுளம் வடக்கு தெருவைச் சேர்ந்த முனியாண்டி மகன் தங்கவேலு என்பவரை விசாரித்த போது தன்னை அடித்து காயப்படுத்தியது தனது மகன் என்பதால் மனைவியிடம் கலந்துபேசிவிட்டு புகார் கொடுப்பதாக சொன்னார். அதனை தொடர்ந்து 16.06.2024 ஆம் தேதி மாலை 06.30 மணியளவில் உதவி ஆய்வாளர் பாண்டியராஜன் மீண்டும் மருத்துவமனை சென்று அ.சா.1 தங்கவேலுவை விசாரித்த போது அவர் கொடுத்த வாக்குமூலத்தை பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற எண். 203/2024, இ.த.ச.பிரிவுகள் 294(b), 324, 506(2) – இன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அ.சா.1 தங்கவேலு என்பவரால் அளிக்கப்பட்ட **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.–2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. உதவி ஆய்வாளரால் பதிவு செய்யப்பட்ட **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.–3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(2) பின்னர் 16.06.2024 ஆம் தேதியன்று இரவு 21.00 மணியளவில் வழக்கினை தன்னுடைய புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்ட உதவிஆய்வாளர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் தங்ககருப்பசாமி, பழனிக்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் . **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.–4** ஆக குறியீடு

செய்யப்படுகிறது. **பார்வை மகஜர் ஆவணம் அ.சா.ஆ.–5** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் தங்கவேலு, பாண்டியம்மாள், செல்வராஜ், மாரிஸ்வரன், முருகன், முனியசாமி, தங்ககருப்பசாமி, பழனிக்குமார் ஆகியோரை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் எதிரியை தேடிவந்த நிலையில், 03.09.2024 அன்று காலை 10.30 மணியளவில் நிலையம் ஆஜரான எதிரியை காரணம் கூறி கைது செய்து நிலையம் கொண்டு வந்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார். அ.சா.1 தங்கவேலுக்கு சிகிச்சை அளித்த சிவகாசி அரசு மருத்துவமனை மருத்துவர் லட்சுமி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்துபதிவேட்டுடன் கூடிய காயச்சான்று பெற்றுள்ளார். விபத்துபதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ–6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் உதவி ஆய்வாளர் தனது விசாரணையின் அடிப்படையில் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை இதச பிரிவுகள் 294(b), 324, 506(2) என்பதிலிருந்து இதச பிரிவுகள் 294(b), 326, 506(2) என மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ–7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர், உதவி ஆய்வாளர் தனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 326, 506(2) – இன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் சொன்ன நேரத்தில் சொன்ன நாளில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடமே

போகாமல் பார்வைமகஜர் மற்றும் மாதிரிவரைபடம் ஆகியவை பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரியை சொன்ன நாள், நேரத்தில் வைத்து கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல. சாட்சிகளை விசாரிக்காமல் அவர்களது வாக்குமூலங்களை பொய்யாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முறையாக புலன்விசாரணை செய்யப்படாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**